# இந்திய வம்சாவழி மலையக மாணவர்கள்பல்கலைகழகத்தில் எதிர் நோக்கும் சவால்கள் இலங்கை தென் கிழக்கு மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு

**M.N.N. Banu**
South Easteren University of Sri Lanka
najkhanbanu@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இலங்கைக்கு வருமானத்தை ஈட்டித்தருவதில் மலையகம் முக்கிய பங்களிப்பை வகிக்கின்றது. இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட மலையகம் வறுமைக்கு உட்பட்ட பிரதேசமாக மக்கள் கண்ணோட்டத்தில் நோக்கப்படுகிறது. பல தசாப்தங்களாக இன்றும் உலகளாவியரீதியில் பேசப்பட்டு வருகின்ற பிரச்சினைகளில் ஒன்றுதான் வறுமையாகும். வறுமை என்பது மகிழ்ச்சியில் குறைவை ஏற்படுத்தக்கூடியதும், சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு தேவையான அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு மிகக்குறைந்த வருமானத்தை கொண்டு காணப்படுதலாகும். (Ahamed Lebbe & Fazeela, 2013). இவ்வாறு வறுமைக்குட்பட்டு காணப்படும் இப்பகுதி மக்கள் கல்வி ரீதியாகவும் பின்தங்கி காணப்படுகின்றனர். இவ்வாறான சிக்கல்களுக்கு மத்தியில் அங்கிருந்து பட்டக் கல்வியை தொடர பல்கலைகழகம் நோக்கி வரும் மாணவர்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இதனால் பல்கலைகழகத்தில் அவர்கள் எவ்வாறான சவால்களை எதிர்நோக்குகின்றனர் என்பதை கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இதனை ஆராயும் நோக்கில் இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் ஒலுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள தென்கிழக்கு பல்கலைகழகத்தில் கல்வியை மேற்கொள்ளும் மலையக மாணவர்களை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இவ்வாய்விற்கு முதலாம் நிலை தரவுகளை சேகரிப்பதற்காக நோக்க மாதிரி அடிப்படையில் 40 மலையக பட்டதாரி மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துகள் வழங்கப்பட்டதுடன் நேர்காணல், அவதானிப்பு என்பவற்றுடன் மலையக பிரதேச செயலக உறுப்பினர் ஒருவர் மற்றும் மலையக ஆசிரியர் 2 பேரிடம் தொலைபேசி கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டன. பத்திரிகை ஆக்கங்கள், புத்தகங்கள், பரீட்சைகள் திணைக்களம், இலங்கை தென்கிழக்கு பல்கலைகழகம் மற்றும் ஆண்டறிக்கைகளில் இரண்டாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. விவரண முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் அட்டவணை, வட்ட வரைபு மற்றும் சலாகை வரைபு முறையான வரைபுகளில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி குடும்ப வருமானம் போதாமையினால 88 சதவிதமானவர்களும், 90சதவீதமானவர்கள் காலநிலை பிரச்சினையினால், 48 சதவீதமானவர்கள் உள ரீதியாக பிரச்சினைகள் என்பது போன்ற பல்வேறுபட்ட சவால்கள் கண்டறியப்பட்டதுடன் மலையக மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அரசாங்கத்திற்கும், மலையக மாணவர்களின் சவால்களை வெற்றி கொள்ளவதற்கான பல்வேறு விடயங்கள் பல்கலைகழகங்களிற்கும் பரிந்துரைகள் இவ்வாய்வில் முன் மொழியப்பட்டுள்ளன.

***பிரதான சொற்பதங்கள்***: *மலையகம், சவால்கள், வறுமை, வாழ்க்கைத்தரம்*

## அறிமுகம்

பதினைந்து இலட்சம் சனத்தொகையை (இலங்கை குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல்-2012) கொண்டு காணப்படும் மலையகமானது இலங்கைக்கு வருமானத்தை ஈட்டித்தருவதில் முக்கிய பங்கையாற்றும் பிரதேசமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அன்று தொட்டு இன்று வரை நம்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இம்மலையகத்தின் பங்களிப்பு முக்கிய பங்காற்றி வருகின்றமை அனைவரும் அறிந்த ஒரு உண்மையே. இலங்கையானது அபிவிருத்தியடைந்து வரும் விவசாய நாடாகும். அந்தவகையில் ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கை வகிக்கும் ஒரு துறை விவசாயத்துறையாகும். விவசாயம்முக்கியமான முதனிலைத் தொழில் ஆகும். நாட்டில் வேறு தொழிலை விடவும் மிக அதிகமானோர் ஈடுபட்டுள்ள தொழிலும் விவசாயமாகும் ( Ahamed

Lebbe & Maruthi, 2013). 1950 களுக்கு முற்பகுதியில் இலங்கையில் விவசாயத்துறையானது சிறியளவான ஒருங்கிணைப்பை கொண்ட உள்நாட்டு விவசாயம் மற்றும் பெருந்தோட்ட விவசாயம் என இரு பெரும் பிரிவுகள் காணப்பட்டன. காலநித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்திலிருந்து பெருந்தோட்ட விவசாயத்தின் பங்களிப்பானது படிப்படியாக அதிகரித்து நாடு சுதந்திரம் அடைந்த வேளையில் இலங்கை பொருளாதாரம் தவிர்க்க முடியாதவாறு பெருந்தோட்ட விவசாயத்தோடு பிணைக்கப்பட்டிருந்தது. ஏனெனில் பொருளாதாரத்தின் முக்கிய தூண்களாக உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி சம்பாத்தியம் ஆகிய மூன்று முனைகளிளும் பொருளாதார துறையே பங்களிப்பு செலுத்தியது. இந்நிலையில் தேயிலையே மலையகத்தின் முதன்மை உற்பத்தியாக காணப்படுகிறது.

மலையக மக்களின் பிரதான சீவனோபாயமாக கொழுந்து பறித்தல் காணப்படுவதுடன் இதை தவிர கைகாசு வேலை, கங்காணி, பசளை இடல், சாக்கு வேலை போன்ற இன்னும் பல தொழில்களில் சிலர் ஈடுபடுகின்றனர். இவர்களது வாழ்க்கை தரத்தை எடுத்து நோக்கும் போது நூற்றுக்கு 95% மானவர்கள் தங்களது அடிப்படை தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றமை சமூகத்தில் கவலைக்குரிய விடயமாகும். பொருளாதார ரீதியாக இவர்கள் தங்களின் வாழ்க்கை தரம் குறைவாக காணப்படுவதற்கு காரணம் 1927 ஆம் ஆண்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான குறைந்த பட்சம் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டமையாகும்.இதனால் தோட்டத்தொழிலாளர்கள் சமூக, பொருளாதார ரீதியில் சுகாதாரம், கௌரவம், சம்பளம், அறிவு, எழுத்தறிவு, வீட்டு வசதி, கடன், தற்கொலை போன்ற பல்வேறுபட்ட பிரதான பிரச்சினைகளை எதிர்நோக்குவது குறிப்படத்தக்கதாகும். தேயிலை தோட்டத்துறையில் நிலவும் போஷாக்கு பற்றாக்குறை, கழிப்பறை பிரச்சினை, லயன் முறை, வடிகால் அமைப்பு போன்ற பல்வேறு சுகாதார பிரச்சினைக்கு முகங்கொடுப்பதால் நோய்வாய்ப்பட்டு தொழிலாளர்களின் வேலைக்கான வரவு குறைகின்றது. எனவே இவ்வாறான சுகாதார பிரச்சினைகளால் உற்பத்தி துறையில் இவை நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.( தமிழ் Mission ,2016 யூலை 25) அத்துடன் மட்டுமல்லாமல் 1998 குடியுரிமை சட்டத்தாலும், 1964 சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் 10 இலட்ச மலையக தமிழர் நாடற்றவர்களானார்கள்.( சந்திர சேகரன், 1999) இதனால் இன்றும் அதிக மலையக மக்களுக்கு இலங்கையில் வாக்குரிமை வழங்கப்படாமல் இருப்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை. நிலைத்து நிற்கக்கூடிய நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு பொருளாதார வளர்ச்சியுடன் சமூக முன்னேற்றங்களும் ஏற்படவேண்டும் என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாக காணப்படுகின்றது (Ahamed Lebbe, 2014). ஆனால் இவர்கள் சமூக, பொருளாதார மட்டுமல்லாமல், சுகாதாரம் ரீதியில் பின்தங்கியும் மற்றும் அரசியல் ரீதியாக உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் இம்மக்கள் எதிர்கால வாழ்விற்கு அடி எடுத்து வைப்பது கவலைக்குரிய விடயமாகும்.

கல்வியின் முக்கியத்துவம் பற்றி Jingan (2007) குறிப்பிடும் போது கல்வியின்றி பொருளாதார அபிவிருத்தி இல்லை என குறிப்பிடுகின்றார். அத்துடன் எந்தவொரு நாட்டிலும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் போதும் கல்வியறிவற்ற சனத்தொகைளை வைத்துக்கொண்டு மேற்கொள்வது ஒரு மடத்தனமான செயலாகுமென Myrdal குறிப்பிடுவதாக Jingan (2007) குறிப்பிடுகின்றார் (Ahamed Lebbe, 2014). அதனடிப்படையில் மலையக மக்களின் கல்வி நிலையை எடுத்துநோக்கினால்,மலையக மாணவர்கள் பல தசாப்தங்களாக ஏனைய பாடசாலைகளுடன் போட்டி போட முடியாதவர்ளாக இருக்கின்றனர்.

இக்காரணிகளாலும் பல்கலைகழகத்துக்கான திறமை அடிப்படை தரப்படுத்தல் போன்ற அனுமதி முறைகள் தற்போதைய மற்றும் மாவட்ட அடிப்படையிலான பங்கீட்டு கொள்கைகள் காரணமாகவும் மலையக மக்கள் நியாயமான வீதத்தில் அதாவது 7 வீதம் என்ற உரித்துடைய தமது இன விகிதாசாரத்துக்கு பல்கலைகழக அனுமதியை பெற முடியாதுள்ளனர். (சந்திரசேகரன் & கருணாநிதி, 2008)

இலங்கையில் முதலாம் நிலைக்கல்வி மற்றும் இரண்டாம் நிலைக்கல்வி குறிப்படத்தக்க அளவு அதிகரித்து சென்றாலும் வரையறுக்கப்பட்ட பல்கலைகழகங்கள் மற்றும் குறைந்தபட்ச நலன்கள் பல்கலைகழக நுழைவை மட்டுப்படுத்துகின்றன (Ahamed Lebbe, 2011). அந்தவகையில் இலங்கையில் 15 பல்கலைகழகங்களுக்கு வருடத்துக்கு 28900 வரையான மாணவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இருந்தபோதும் அவர்களிள் மலையக மாணவர்களின் எண்ணிக்கை 120-150 மட்டுமே. இந்த எண்ணிக்கையானது மொத்த இன வீதத்திற்கு மிகவும் குறைவாகும். தெரிவாகும் 120-150 பேரில் பெரும்பாலும் கலை மற்றும் வர்த்தக பிரிவை சார்ந்தவர்கள். இவர்களிள் 25-30 வரையானவர்களே விஞ்ஞான கற்கைகள் சார் பீடங்களுக்கு தெரிவாகின்றனர். இவர்களிள் 65% லயன்களிள் வாழ்வோர் அல்ல.(தமிழ் Mission ,2016 யூலை 25) இவ்வாறு குறைந்த எண்ணிக்கையில் மலையகத்திலிருந்து பல்கலைகழகங்களுக்கு வரும் மாணவர்கள் அங்கு எவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்றும் சவால்களை எதிர் கொள்ள தீர்வுகளை முன்வைப்பதுமே இவ்வாய்வின் நோக்கமாகும்.

இவ்வாய்வினை மேற்கொள்ளும் முகமாக ஆய்வுக்குட்படுத்தும் பிரதேசமாக இலங்கை தென்கிழக்கு பல்கலைகழகத்தில் பயிலும் மலையக பட்டதாரி மாணவர்களை அடிப்படையாக கொண்டதாக காணப்படுவதுடன் இப்பல்கலைகழகம் இலங்கையின் 10வது தேசிய அரச பல்கலைகழகமாக 1995.10.23 அன்று அம்பாறை மாவட்ட ஒலுவில் பிரதேசத்தில் அமைக்கப்பட்டது. இன்று 5 பீடங்களில் 3819 மொத்த மாணவர்களை கொண்டு இயங்கிவரும் இப்பல்கலைகழகத்திற்கு கடந்த சில வருடங்களாக மலையகத்திலிருந்து வரும் மாணவர்களை நோக்கினால், 2011/2012 ஆண்டிற்கு 17 பேரும், 2012/2013 ஆண்டிற்கு 10 பேரும், 2013/2014 ஆண்டிற்கு 13 பேரும், 2014/2015 ஆண்டிற்கு 16 பேரும் ஆக காணப்படுகிறது.(பரீட்சைகள் திணைக்களம்- இலங்கை தென் கிழக்கு பல்கலைகழகம்).

**ஆய்வின் நோக்கம்**

மலையகத்தில் இருந்து வரும் மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியை தொடர்வதில் எதிர்நோக்கும் சவால்களை கண்டறிவதுடன் அதற்கான காரணங்கள் மற்றும் தீர்வுகள் என்பவற்றை முன்வைப்பதுவுமே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வினை சிறப்பான முறையில் நடாத்திச் செல்வதற்காக முதலாம் நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டன.முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து, கலந்துரையாடல் என்பன பயன்படுத்தப்பட்டன.வினாக்கொத்துக்கள் தென்கிழக்கு பல்கலைகழகத்தில் கற்கும் இந்திய வம்சாவழி மலையக பட்டததாரி மாணவர்களில் நோக்க மாதிரி எடுப்பின் மூலம் 40 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. கலந்துரையாடல் மலையக பிரதேச செயலக உறுப்பினர்

ஒருவர், மலையக ஆசிரியர்கள் 2 பேர்,போன்றவர்களிடம் மேற்கொள்ளப்பட்டன.இவ்வாறு பெறப்பட்ட தரவுகள் விவரண முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டடு முடிவுகள் அட்டவணை வட்ட வரைபு, சலாகை வரைபு முறையான வரைபுகளில் காட்டப்பட்டுள்ளது. மேலும் இதற்கு Microsoft Office மென்பொருள் பயன்படுத்தப்பட்டது.இரண்டாம் நிலைத்தரவுகளாக புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகை ஆக்கங்கள், இணையம் என்பவவற்றுடன் பரீட்சைகள் திணைக்களம், இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம் மேலதிக தரவுகளும் பெறப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

**ஆய்வின் முடிவும் விதந்துரைகளும்**

இவ்வாய்வின் முடிவிற்கிணங்க மலையகத்திலிருந்து பல்கலைகழகத்திற்கு வரும் மாணவர்கள் பற்றிய பல தகவல்களுடன் அவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் கண்டறியப்பட்டன. அவையாவன,

**பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலை**

96%மான மாணவர்களின் பெற்றோர்கள் தொழில்புரிபவர்களாக காணப்படுகின்றனர். அதில் 68%மானவர்கள் கொழுந்து பறித்தலையும், 12%மான பெற்றோர்கள் கைக்காசு வேலையில் ஈடுபடுவதும் தொழிலாக தொழிலாக காணப்படுகிறது. இதில் 65%மான மாணவர்களின் குடும்ப மொத்த வருமானம் 25000 ரூபாவிற்கு குறைவாகவே உள்ளதால் அத்தொகை அவர்களது மாதாந்த குடும்ப செலவை நிவர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. காரணம் 56%மானவர்களின் குடும்பங்களில் ஒருவர் மட்டுமே தொழில் புரிவதுடன் 75%மான குடும்பங்களில் 5 அல்லது 5இற்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இவ்வாறான குடும்பப் பிண்ணனியிலிருந்து வந்த 56%மான மாணவர்களுக்கு 5000 ரூபா முதல் 10000 ரூபா வரை பல்கலைகழக மாதாந்த சராசரி செலவு ஏற்படுகின்றது. இதில் அனைவரும் அடிப்படை தேவை உணவிற்கே அதிகம் செலவழிக்கின்றனர். இதர செலவீனங்களில் Photo copy, Printing, Stationary Goods வாங்குவதற்கு 80% மானவர்கள் செலவழிப்பதால் பல்கலைகழக வாழ்வில் இவற்றுக்கான நுகர்வுச்செலவு அதிகம், அதற்கான வருமானம் போதாது என 88%கள் குறிப்பிடுகின்றனர். 80%கள் Mahapola&Bursery புலமைபரிசிலை பெற்றுக்கொள்பவர்கள் காணப்பட்டாலும் அவை குறிப்பிட்ட நேரத்திற்கு வழங்கப்படாதது பெரும் சிக்கலாக காணப்படுகிறது என கூறுகின்றனர். பல்கலைகழக வாழ்வில் புலமைபரிசில்கள் போதுமானதாக இல்லை என கூறும் இவர்கள் அதற்கு பிரதான காரணியாக வீட்டு வருமானம் போதாத நிலை, 88%மானவர்களின் வீட்டில் 2 அல்லது 2 இற்கு மேற்பட்டவர்கள் கல்வியை கற்கின்றவர்கள் என்ற நிலை காணப்படுகின்ற வேளை அப்பிள்ளைகளின் கல்விச்செலவையும் கவனிக்க வேண்டிய நிலை காணப்படுவதால் இம்மாணவர்களில் 78%மானவர்கள் கல்விக்கான முழு செலவையும் வீட்டில் இருந்து பெற்றுக்கொள்ள சிரமப்படுகின்றனர். இதனால் பல்கலைகழகத்தில் எழும் மேலதிக செலவுக்கான தொகையை பெற்றுக்கொள்ள இம்மாணவர்கள் பெறறுக்கொள்ள பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

**வேலைக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம்**

இம்மாணவர்களில் 90%களின் குடும்பப்பிண்ணனி வறுமை நிலையில் காணப்படுவதுடன் இவர்களின் 13%மான பெற்றோர்களே க.போ.த உயர்தரம் வரை கல்வியை கற்றுள்ளனர். இவ்வாறு கல்வி அறிவில்லாத சூழல்,வறுமை

காரணமாக பட்டக்கல்வியில் முழுமையாக கவனம் செலுத்த முடியாத நிலைக்கு உள்ளாவதுடன், 14%மான மாணவர்கள் பல்கலைகழக கல்வியை இடையில் விட்டு விட்டு வேலைக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுகின்றனர்.

**போக்குவரத்து பிரச்சினை**

மலையகத்துக்கு அண்மையில் காணப்படும் பல்கலைகழகங்களில் மொழி பிரச்சினை காரணமாக இம்மாணவர்கள் அங்கு செல்ல அச்சப்படுவதால் இவர்கள் துாரப்பிரதேச பல்கலைகழகங்களுக்கு செல்ல தள்ளப்படுகின்றனர். இதனால் 58%மான மாணவர்கள் போக்குவரத்து பிரச்சினைக்கு முகங்கொடுக்கின்றனர். இதற்கு பிரதான காரணமாக அமைவது அதிகமான மலையக பாதைகள் சீர்படுத்தப்படாமையும், மக்களுக்கான பஸ் சேவை வறையறுக்கப்பட்டு காணப்படுகின்றமையாகும்

**வழக்கத்தினின்றும் மாறுபட்ட சமூகம்**

மலையக மாணவர்கள் எதிர்நோக்கும் மற்றுமொரு சவாலாக அமைவது, புதிய சமுதாயத்தின் மொழிநடை,பழக்கவழக்கம்,கலாசாரம் உணவு முறைகள் போன்ற வழக்கங்களை அவர்களால் விரைவாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு 25%மான மலையக மாணவர்கள் முகங்கொடுப்பது இவ்வாய்வின் மூலம் தெரிய வந்தது.

**கணிணி மற்றும் ஆங்கில அறிவு போதாமை**

மலையக பாடசாலைகளை பொருத்தவகையில் பெரும்பாலாக ஆங்கிலம் மற்றும் கணிணி தொடர்பான அடிப்படை அறிவு போதிக்கப்படுவது குறைவாகவே காணப்படுகிறது. இதனால் மலையகத்திலிருந்து மாணவர்கள் பல்கலைகழகத்தில் அனேகமான கலவிசார் செயற்பாடுகள் இத்துறைகளுடனே காணப்படுவதால் இம்மாணவர்கள் அதற்கு இயைபாக்கம் அடைவது சிரமம் காணப்படுவதாக 88%மானவர்கள் மற்றுமொரு சவாலாக சந்திக்கின்றனர்.

**காலநிலை மாற்றம்**

காலநிலை மாற்றத்தினால் தோல் ஒவ்வாமை, கை,கால் வெடிப்பு, முடி உதிர்தல், தலை வலி, உடல் நீர் சமனிலை இழத்தல் போன்ற சௌக்கிய சவால்களுக்கு 95%மானவர்கள் பாதிக்கப்படுவதுடன் அவர்களுக்கு மேலதிகமாக மருத்துவ செலவொன்றையும் ஏற்க வேண்டிய நிர்பந்த நிலைக்கு உள்ளாகின்றனர்.

**உளவியல் ரீதியில் பாதிக்கப்படல்**

இலங்கையை பொறுத்தவரை இந்திய தமிழர் என்ற ரீதியில் மலையக மக்களை அனேகமான இடங்களில் புறந்தள்ளப்படுகின்றனர். இது உளவியல் ரீதியாக பல்வேறு பாதிப்புக்களை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றன. வறுமை நிலைக்கு உட்பட்டவர்கள் என மற்றவர்களால பார்க்கப்படுகின்றமையும், தாழ்வு மனப்பான்மை , சாதி,பிரதேச வேறுபாடு, குடும்ப நிலை குறித்த அச்சம் போன்ற உள ரீதியான பிரச்சனைகளுக்கு 48%மானவர்கள் முகங்கொடுப்பது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

**ஊழிய சந்தையில் போட்டியிட முடியாத நிலை**

78%மான மாணவர்கள் பட்டபடிப்பு தவிர இதர பாடநெறிகளை வெளியில் சென்று கற்பதற்கான போதியளவு வருமானம் போதாத நிலையினால் பட்டச் சான்றிதழ்

உடன் மட்டும் வெளியாகும் நிலையில் ஊழியச் சந்தையில் தகுதி போதாமை என்று முத்திரையிட்டு புறந்தள்ளப்படுகின்றனர். மேலும் க.போ.த உயர்தரம் முடித்தவுடன் மலையகத்தில் ஆசிரியர் நியமனம் கொடுப்பதால் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தும் வேலைக்கு காத்திருக்க வேண்டிய நிலைக்கு இவர்கள் தள்ளப்படுகின்றனர்.

**மலையக சக மாணவர்களின் வருகை குறைவு**
மலையகத்தில் இருந்து பல்கலைகழகத்துகான மாணவர் வரவானது குறைவாக காணப்படுவதால் தங்கள் மலையக மரபு,கலாசாரங்களை வெளிப்படுத்த களம் கிடைத்தும் போதியளவு மாணவர்கள் இன்மை இன்னொரு சவாலாக எதிர்கொள்கின்றனர். இதில் ஆண் மாணவர்கள் 30%களே வருகை தருவது கவலைக்குரிய விடயமாக நோக்கப்படுகிறது.

இவ்வாறான பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கும் இவர்களில் 37%மானவர்கள் தங்களுக்கென்று மலையகத்தில் தனிப்பல்கலைகழகம் ஒன்றை பரிந்துரையாக முன்வைக்கின்றனர்.

இவ்வாறு மலையகத்தில் இருந்து பல்கலைகழகத்திற்கு வரும் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களை முறியடிப்பதற்காகவும் மலையக மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தல், அதிகமான கல்வி கற்கும் பிள்ளைகளை உடைய குடும்பங்களுக்கு உதவி திட்டங்களை அறிமுகம் செய்தல், மலையக பாடசாலை மாணவர்களுக்கு உயர் கல்வி மற்றும் பல்கலைகழக கல்வி பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களை அதிகரித்தல், மரலயக பாடசாலைகளில் கணிணி மற்றும் ஆங்கில அறிவினை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுத்தல், மலையக மக்களுக்கு கல்வியின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை புரிய வைக்கும் நிகழ்ச்சி திட்டங்களை முன்வைத்தல், அரசாங்கம் பெருந்தோட்டங்களில் வேலை செய்பவர்களின் சம்பள ஏற்படுத்த முயற்சி செய்தல், பல்கலைகழகங்களில் வெவ்வேறு கலாசாரங்களை கண்டறிந்து அதற்கேற்ப உணவுகளை வழங்க திட்டமிடல், இவர்களது தாழ்வு மனப்பாங்குகளை குறைப்பதற்கு பல்வேறு உளவியல் சார்ந்த கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல், மேலதிக பட்டப்படிப்பை தொடருவதற்கான உதவிகளை அம்மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்தல், இம்மாணவர்களுக்கு மேலதிக கற்கை நெறிக்கு சலுகைகளை வழங்குதல், அவர்களுக்கான புலமை பரிசில்களை அதிகரித்தல், வழங்கப்படும் புலமை பரிசில்களை நியாயத்துவமாக வழங்க நடவடிக்கைகள் எடுத்தல், இன்னும் அவற்றை உரிய நேரத்தில் வழங்க வேண்டும். அத்துடன் உயர் தர கற்கை முடிந்ததும் மலையகத்தில் ஆசிரியர் நியமனம் கொடுப்பதை தவிர்க்க வேண்டும் என்பன இதற்கான பல்வேறு பரிந்துரைகளாக காணப்படுகின்றன.

## REFERENCES

### Books

Sandrasegaram,S. & Karunanithy, M.(2008). *Arivusar Porulatharamum Kalvium*.Chemamadu: Poththakasalai,U.G.50,People's Park, Colombo-11

Sandrasegaran, S. (2004). *Education-A multi-Faced Approach:*Uma publisher,521/1.Galle Road,Colombo-6

மூக்கையா,மா.செ.(1995) "*இன்றைய மலையகம்*". பீ.ஆர்.லித்தோகிராபர்ஸ், சென்னை – 600013

கீத பொன்கலன்,ச.(2004) *"இருபத்தோரதம் நூற்றாண்டில் மலையகத்தமிழர் எதிர்நோக்கும் சவால்கள்".*
லியோ மார்க்கா ஆஸ்ரம்,121/1, புனித தோமையர் வீதி,பண்டாரவளை.

**website**

Ahamad Lebbe,S.M.(2011)," *GenderImbalancesinUniversity Admissionin SriLanka*" VolumeVI INo.1-October 2011 Retrieved from http://ir.lib.seu.ac.lk/bitstream (Accessed On 1st December 2016)

Ahamad Lebbe,S.M.& Maruthi, L.(2013)," யாழ்ப்பாண பிரதேசத்தில் யுத்தத்திற்குப் பின்னர் விவசாயத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் (சந்தைப்படுத்தல் பிரச்சினை தொடர்பான ஒரு ஆய்வு)" Proceedings of the Third International Symposium, SEUSL: 6-7 July 2013, Oluvil, Sri Lanka Retrieved from http://www.seu.ac.lk/researchandpublications/symposium/international (Accessed On 26th August 2016)

அஹமது லெப்பே,S.M & பஸீலா,M.F.(2013)," வறுமையும், சமூக தாக்கங்களும் தொடர்பான ஒரு பகுப்பாய்வு" Proceedings of the Second ARC, FMC, SEUSL: 2013 Retrieved from http://ir.lib.seu.ac.lk/bitstream/handle (Accessed On 1st December 2016)

அஹமது லெப்பே,S.M.(2014)," இலங்கையின் சமூக பொருளாதாரக் குறிகாட்டிகள் - சார்க் நாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒப்பீட்டாய்வு" Volume 3 Issue 1 December 2014, Retrieved from http://researchgate.net/profile/seeni_ahamed_Lebbe/publication (Accessed On 24th August 2016)

அனுர.க."*மலையக அமைச்சர்கள் வெட்கித்தலை குனிய வேண்டும்*".(2016,மார்ச் 5).தமிழ் Mission பத்திரிகை, பக்கம்-07.s

அரிதர்,நா.(1999)."*மலையகக் கல்வியின் தடைப்பாடுகள்*".குன்றின் குறல் பத்திரிகை, ஜனவரி- ஏப்ரல் இதழ்-1 பக்கம்- 07

Central Bank Report – 2014

Examination Department, South Eastern University of Sri lanka